பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 14உ (31—10—67) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 15உ (1—11—67) புதன் [இதழ்: 115

## சென்னைக்குக் காவிரி நீர் கொணரும் திட்டம் துவக்கம்

### அண்ணா கரம் அழுத்த--காவிரியன்னை குடமேந்தி நீர் கொட்டிய காட்சி!

சென்னை, அக். 31—

தமிழகத் தலைநகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவைக்கும் திட்டம் நேற்று துவக்கிவைக்கப்பட்டது.

சிதம்பரத்துக்கு அருகிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து காவிரியாற்று நீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் ரூ. 24½ கோடி செலவு மதிப்புள்ள இத்திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் [illegible]க்கிவைத்தார்கள்.

ஆண்[illegible]தோறும் கோடைக்காலத்தில் சென்னை நகர மக்கள் குடிநீர்ப் பற்றுக்குறையால் அவதிப்படுவதைத் தவிர்க்கக் காங்கிரசுக் கட்சி---தனதுடைய ஆட்சிக்காலத்தில்---உருப்படியாக எதையும் செய்யவில்லை! மாநகராட்சியின் ஆளும் பொறுப்பை தி. மு. கழகம் ஏற்றதும், காவிரி நீர்த் திட்டத்தை உருவாக்கி. அரசின் அனுமதி கோரிக் காத்திருந்தது; காங்கிரசு அரசினரோ, 'இதோ, அதோ' என்று நாளைக் கடத்திக்கொண்டே வந்தனர்!

காவிரித் திட்டத்தைக் கூறினால் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைக் காட்டியும், கிருஷ்ணா திட்டத்தைக் கேட்டால் காவிரித் திட்டத்தைக் காட்டியும் சாக்குப்போக்குக் கூறிக் கொண்டிருந்தனர்!

தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை தி. மு. கழகம் ஏற்ற பிறகுதான், அறிஞர் அண்ணா அவர்கள், காவிரித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்து, அதற்கென ஒரு தொகையையும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கினார்கள்.

இருபதாண்டுக்காலமாகக் காங்கிரசு ஆட்சியாளர்கள் செய்யத் தவறியதை இப்போது தி. மு. க. ஆட்சி செய்ய முனைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டவுடன்—இரண்டாண்டுக் காலத்தில்—சென்னை நகரின் குடிநீர்ப் பஞ்சம் அடியோடு நீங்கிவிடும்.

காவிரி நீர்த் திட்டத் துவக்க விழா சைதாப்பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் நேற்று மாலை நடைபெற்றது.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி விழாவுக்குத் தலைமைதாங்கினார்,

தலைமைப் பொறியர் திரு. உசேன், விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றார்.

அண்ணா அவர்கள் திட்டத்தைத் துவக்கிவைக்கும் வகையில் ஒரு பித்தானை அழுத்தினார்கள்; உடனே அருகிலிருந்த வண்ணத்திரை விலகியது; உள்ளே குடம் ஏந்திய காவிரியன்னையின் அழகிய சிலை ஒன்று காட்சியளித்தது; குத்து விளக்கு எரிந்துகொண்டிருந்தது; அதன் அருகில் இருந்த தேங்காய், மின்விசை மூலம் தானே இரண்டாக உடைந்தது; பக்கத்தில் இருந்த கற்பூரம், தானே எரிந்தது; காவிரியன்னையின் கையிலிருந்த குடத்திலிருந்து தண்ணீர் கொட்டியது; மேலிருந்து பூமாரி பொழிந்தது!

காவிரியன்னையின் சிலைக்கு அடியில் திட்டத்துக்கான அடிக்கல் அமைக்கப்பட்டிருந்தது.

விழாவில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், செ. மாதவன், மா. முத்துசாமி, சாதிக் பாட்சா, மேயர் இரா. சம்பந்தம், மாநகராட்சி தி.மு.க. தலைவர் வி. முனுசாமி ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர்.

விழாத் துவக்கத்தில், இசைச சித்தர் சிவம்பரம் செயராமன் வணக்கப் பாடல் பாடினர்.

### காதால் கேட்டது!

"தென் சென்னைத் தேர்தல் முடிவை வடக்கே உள்ள காங்கிரசுக்காரர்கள் எதிர்பார்க்கிறார்களாமே?"

"எதற்காக?"

"தங்கள் கட்சியின் தலைவர் தேர்தல் நிலைமைகளைச் சரிசெய்ய!'

"இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?"

"தென் சென்னையில், தி.மு. கழகம் வெற்றி பெறப்போகிறது. 'அந்தத் தேர்தலிலும் கோட்டை விட்டுவிட்ட உங்களுக்கு அனைத்திந்தியக் கட்சித் தலைமைப் பதவி வேறு இன்னும் நீடிக்க வேண்டுமா?' என்று கேட்டு—காமராஜரை திரும்பவும் தமிழகத்துக்கு அனுப்புவது என அங்கே உள்ள பெருந்தலைகள் முடிவு செய்திருக்கின்றனவாம்!"

### சென்னைக்கு வரும் காவிரியன்னை!

#### அண்ணாவின் மகிழ்ச்சி---வரவேற்பு

சென்னை, அக். 31—

"எங்கெங்கு தேவையோ அங்கே செல்வது காவிரியின் இயல்பாக உள்ளது. காவிரி உற்பத்தியாவது கருநாடகத்தில்தான் என்றாலும், கன்னட இலக்கியத்தில் உள்ளதைவிடத் தமிழ் இலக்கியத்தில்தான் காவிரியைப் பற்றிப் பலபடக் கூறப்பட்டிருக்கிறது; 'உயிரூட்டும் காவிரி' என்று போற்றப்படுகிறது; நாகரிகத்தின் தொட்டிலாகக் காவிரிக்கரை வர்ணிக்கப்படுகிறது!

"காவிரியையும்—நல்ல புத்திக்கூர்மையையும், நல்லதுக்கும் கெட்டதுக்கும் சம்பந்தப்படுத்திச் சொல்லுவார்கள்; 'காவிரித் தண்ணீரைக் குடித்து வளர்ந்தவன்' என்பார்கள்; டில்லியில்கூட இப்படிச் சொல்லிக் கேட்டிருக்கிறேன்!

"எனவே, மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும், 'எதிர்காலம் நன்றாக இருக்கும்' என்ற நம்பிக்கையோடு காவிரி நீர்த் திட்டத்தைத் துவக்கிவைக்கிறேன்"

என்று அறிஞா அண்ணா அவர்கள், நேற்று சென்னைக்குக் காவிரி நீரைக் கொணரும் திட்டத்தைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

### அறிவிப்பு

நாளை நமது அலுவலகத்திற்கு விடுமுறையாதலால் 'நம்நாடு' அடுத்த இதழ் 2—11—67 சென்னையிலும் மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்.

### காமதேனு---இது ஒரு புது வகை!

#### வழங்கவில்லை -- வாங்குகிறது!

கடந்த 29-ந் தேதியன்று சென்னையிலுள்ள 'காமதேனு' கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மொத்த வசூல் ரூ. 1,05,792 ஆகும்.

இதுவரையில் இவ்வளவு தொகைக்கான வியாபாரம் அங்கு நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது!

### ஏழைகள் வாழ்வுக்கு நம்பிக்கையூட்டிய சோவியத்!

சென்னை, அக். 31—

"உலகத்துக்கே ஒரு புதிராக இருந்த நாடு இரஷ்யா, ஒரு கேள்விக் குறியாகவும் விளங்கியது!

"இரஷ்யா உருவான பிறகு தான் மூட்டை தூக்குபவர்கள்—நாளெல்லாம் உழைப்பவர்கள்—தொழிலாளர்கள் —ஒடிந்து விழுந்தவர்களெல்லாம் எழுந்து நின்று, 'நாமும் வாழ முடியும்' என்ற நம்பிக்கை கொண்டார்கள்!

"பல நாடுகள் நமக்குப் பொன் கொடுத்தன—பொருள் கொடுத்தன—புத்தகங்கள் கொடுத்தன—தொழிற்சாலைகள் அமைத்து இயந்திரங்கள் கொடுத்தன! ஆனால், இரஷ்ய நாடு நமக்கு, 'வாழ முடியும்' என்ற நம்பிக்கையை – ஓர் உற்சாகத்தைக் கொடுத்தது!"

---அறிஞர் அண்ணா

(இந்திய—சோவியத் கலாச்சாரக் கழகத்தின் மாநில மாநாட்டில்)

### தஞ்சையிலிருந்து ஏற்றுமதியாகும் குறுவை

"குறுவை அறுவடை ஆரம்பமானதிலிருந்து 46,460 டன் நெல்லையும், அரிசியையும் 3,248 வாகின்களில் தஞ்சைப் பகுதிகளிலிருந்து இரயில்கள் ஏற்றிச சென்றன. வாகின்கள் கொடுப்பதில் இரயில்வே அதிகாரிகள் நெருங்கிய ஒத்துழைப்புத் தருவதால், திட்டமிட்டபடி போக்குவரத்து நன்றாக உள்ளது"

என்று உணவு வழங்குதுறை ஆணையாளர் கூறினார்.

### அமைச்சர் தரும் தகவல்

"தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 80,000டன் அரிசி கிடைக்கக்கூடிய அளவுக்கு நெல் கொள்முதல் பெய்யப்பட்டிருக்கிறது"

என, செய்தியாளர்களிடம் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கூறினார்.

### மாறன் பெறும் வாக்குகளைக் கண்டு டெல்லி திகைக்க வேண்டும்!

சென்னை, அக். 31—

"இருபது ஆண்டுகளாக நாட்டுக்கு ஒருவித 'நோய்' இருந்தது; அது, கடந்த எட்டுத் திங்களுக்கு முன்பு நீங்கியது; தி. மு. க. ஆட்சி மலர்ந்தது; அண்ணா போட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன!

"ஆட்சிபீடத்தில் முன்பு இருந்தவர்கள் விட்டுச் சென்ற குறைகளைப் போக்க இப்போது முயற்சி செய்யப்படுகிறது! 'மக்களுக்குச் செம்மையான வாழ்க்கையை அமைத்துத் தந்தே தீரவேண்டும்' என்று கழக அரசு முயற்சி செய்துகொண்டு வருகிறது!

"மக்களிடையே நிலவும் அறியாமையை ஒழிக்கவும், நல்லெண்ணத்தை வளர்க்கவும் கழக அரசு பாடுபட்டு வருகிறது!

"தென் சென்னை இடைத் தேர்தலில், கழக வேட்பாளர் மாறன் பெரும் அளவு வாக்குகள் எண்ணிக்கையில் வெற்றிபெற வேண்டும், அதைக் கண்டு டெல்லி அரசு திகைக்க வேண்டும் -- திணற வேண்டும்; 'இவ்வளவு வாக்குகள் பெற்று வெற்றியடைந்திருக்கிறரே--தமிழகத்தில் இந்திக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறதா' என ஆச்சரியப்பட வேண்டும்."

---எம். ஜி. இராமச்சந்திரன்

(சைதையில் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவில்)

நம்நாடு
ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.,பி.எல்.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 14 (31—10—67) புதன்

# கழகம் போட்டியிடுவது ஏன்?

தென் சென்னை இடைத் தேர்தலில் கழகம் போட்டியிடுவதைக் குறித்து முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார்—பொருத்தமில்லாத காரணங்களைக் காட்டி—காங்கிரசு வேட்பாளருக்கு, வாக்காளர்களின் ஆதரவைக் கோரியுள்ளார். ஆனால், வாக்காளர்களில் பெருந் தொகையினரோ, முன்னாள் முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்கமாட்டார்கள் என்பது உறுதியிலும் உறுதி.

தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியை உருத்தெரியாமல் விழ்த்திய பொதுத் தேர்தல் நடைபெற்று எட்டே எட்டுத் திங்கள்தான் ஆகின்றன. இக்குறுகிய காலத்துக்குள்ளாகத் தாங்கள் சில திங்களுக்கு முன் எடுத்த முடிவை, தென் சென்னை வாக்கர்ளர்கள் மாற்றிக்கொள்ளுவார்கள் என எதிர்பார்ப்பது பேதமையாகும். தாங்கள் முன்னர் எடுத்த முடிவை மாற்றிக்கொள்ளுவதற்குரிய காரணம் எதுவும், இந்தக் குறுகிய காலத்துக்குள்ளாகத் தென் சென்னை வாக்காளர்களுக்கு ஏற்பட்டுவிடவுமில்லை.

இந்த எட்டுத் திங்கள் கழக ஆட்சி ஏதோ மன்னிக்க முடியாததும், மறக்க முடியாததுமான பெருந்தவற்றைச் செய்துவிட்டிருப்பதுபோலவும், அத்தவறை தென் சென்னை வாக்காளர்கள் உணர்ந்துகொண்டு – அதனால் ஏற்பட்டிருக்கின்ற தங்கள் அதிருப்தியைக் கழகத்துக்கு உணர்த்த வாய்ப்பை எதிர்நோக்கிக்கொண்டிருந்தது போலவும், இந்த இடைத்தேர்தல் அதற்கேற்ற வாய்ப்பாகக் கிடைத்திருப்பது போலவும் முன்னாள் முதலமைச்சர் முடிவு கட்டிக்கொண்டு, காங்கிரசு வேட்பாளருக்கு ஆதரவு தேடக் கிளம்பியுள்ளாரா என்பது சந்தேகமே!

ஏதோ—தமது அரசியல் வாழ்வுக்கு இறுதித் தீர்ப்பை எழுதிவிட்டு, மூப்படைந்த பருவத்தில் தம்மை 'அரசியல் அனாதை'யாக ஆக்கிவிட்ட கழகத்தின்மீது தமக்குள்ள ஆத்திரத்தைக் காட்டிக்கொள்ள இந்த இடைத்தேர்தலை, முன்னாள் முதலமைச்சர், கிடைத்தற்கரிய வாய்ப்பாகப் பயன்படுத்திவருகின்றார் என்பது தான் உண்மையாக இருந்திட முடியும்.

"இந்திரா காந்தியின் ஆட்சி நீடிக்கவேண்டும் என விரும்புகின்ற கழகம், ஏன் இந்த இடைத்தேர்தலில் போட்டிபோட வேண்டும்? இருக்கும் மத்திய ஆட்சியை மாற்ற விரும்பவில்லை என்றால், ஏன் போட்டி போடவேண்டும்?" என்ற கேள்வியை, முன்னாள் முதலமைச்சர் கேட்கின்றார்.

இத்தொகுதியை, காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுக்க அறிஞர் அண்ணா அவர்கள்—கழகத்தின் சார்பில்—ஏற்கனவே விருப்பம் தெரிவித்ததை முன்னாள் முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளச் செய்திருந்தால், இக்கேள்வியைக் கேட்பதற்கே இடமிருந்திருக்காது. இதுபற்றி ஏற்கனவே விரிவாகவும், விளக்கமாகவும் இப்பகுதியில் எழுதியுள்ளோம்.

இந்த இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் பெறவிருக்கின்ற வெற்றியால், 'மத்திய ஆட்சி மாற்றப்பட்டுவிடுமா?' என்பதுதான் சிந்திக்கவேண்டிய பிரச்சினையாகும். இத்தொகுதியில் கழகம் பெறுகின்ற வெற்றியினால், இன்றைய மத்திய அமைச்சரவை எந்த வகையிலும் மாற்றம் பெறப்போவது கிடையாது.

பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராக நின்ற அறிஞர் அண்ணா அவர்கள்தான் வெற்றி பெற்றிருக்கின்றார். எனவே, இந்த இடைத்தேர்தலில் கழக வேட்பாளரான முரசொலி மாறன் அவர்கள் பெறுகின்ற வெற்றி, ஏற்கனவே பொதுத்தேர்தலில் கழகம் பெற்றுள்ள வெற்றியை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்துவதாகுமே அல்லாது, வேறு ஒன்றுமில்லை. எனவே, இந்த இடைத்தேர்தலில் கழகம் போட்டியிடுவதை, மத்திய அமைச்சரவையை மாற்றும் முயற்சியுடன் இணைத்துப் பேசும் முன்னாள் முதலமைச்சரின் அரசியல் அறியாமைக்கு இரங்க வேண்டியிருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கழகத்துக்கும் சரி—இன்று எதிர்க் கட்சியாக இயங்கிவருகின்ற காங்கிரசுக் கட்சிக்கும் சரி—நடைபெறக்கூடிய இடைத் தேர்தல் என்பது, மக்களின் கருத்தறியும் உரைகல்லாகும்—அளவுகோலாகும். எனவே, இடைத் தேர்தலை ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் மனமுவந்து வரவேற்கத்தான் வேண்டும்—வரவேற்கும்.

ஆட்சிப் பொறுப்பை ஒரு கட்சி ஏற்றுக்கொண்டு குறுகிய காலமாக இருந்தாலும், நீண்ட காலமாக இருந்திட்டாலும, அக்கால அளவுக்குள் தான் செய்த பணி அல்லது பணிகளுக்கு, வாக்காளர்களின் ஆதரவு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற கட்சிக்கு இன்றியமையாததாகும். இடைத் தேர்தலில் தனக்கு மக்கள் தருகின்ற தீர்ப்பைக்கொண்டு தான், தான் செய்துள்ள பணிகளுக்கு வாக்காளர்கள் ஆதரவு எந்த அளவுக்கு உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான், தனது பணிகளில் மாற்றம் எதுவுமில்லாமல் தொடர்ந்து செய்யவோ அல்லது சிறு சிறு மாற்றங்களைச் செய்து தொடரவோ ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சிக்கு வாய்ப்பு ஏற்படக் கூடும்.

இதுபோன்றே, இடைத் தேர்தலில் கிடைக்கின்ற தீர்ப்பைக் கொண்டுதான், எதிர்க் கட்சியும்—'எதிர்க் கட்சி' என்ற முறையில்—தான் கடைபிடித்து வரக்கூடிய போக்கிலிருக்கின்ற குறைவு நிறைவுகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப தனது எதிர்கால போக்கைத் திருத்தியமைத்துச் செம்மைப்படுத்திக் கொள்ள முடியும். இக்காரணத்தினால்தான், இடைத் தேர்தலில் பங்கு கொள்ளவேண்டிய கட்டாயம் ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இன்றியமையாத அரசியல் தேவையாகிறது.

இந்த ஒரே காரணத்துக்காகத்தான், தென் சென்னை இடைத் தேர்தலில், கழகம், தனது வேட்பாளராக முரசொலி மாறன் அவர்களை இப்பொழுது நிறுத்தியுள்ளதும், கழக வேட்பாளரை எதிர்த்துக் காங்கிரசுக் கட்சி போட்டியிடுவதும் ஆகும். கழகமும்—காங்கிரசுக் கட்சியும் ஒன்றையொன்று எதிர்த்து இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு, மேலே எடுத்துக்காட்டியுள்ளதுதான் மூலகாரணமாகும்.

போட்டியிடுவதற்கான காரணம் தெளிவாக இருக்கின்றது. எனவே, கழக ஆட்சி இந்த எட்டுத் திங்களாகச் செய்திருக்கின்ற பணிகளில் ஏதாவது குறைபாடு இருப்பதாகத் தாம் உணர்ந்தால்—அக்குறைபாட்டினைச் சுட்டிக்காட்டி—காங்கிரசு வேட்பாளரை ஆதரிக்கும்படி வாக்காளர்களைக் கேட்டுக்கொள்ளுவதைத்தான் முன்னாள் முதலமைச்சர் செய்திட வேண்டும்; அதுதான் அரசியல் நாகரீகம்; அம்முறையில்தான் சனநாயக மாண்பு பளிச்சிடும்.

ஆனால், முன்னாள் முதலமைச்சரோ, அதைச் செய்யவில்லை; அதாவது, கழக ஆட்சி இதுவரை செய்துள்ள பணிகளைப் பற்றி மூச்சுவிடவில்லை. கழக ஆட்சி செய்துள்ள பணிகளில் ஏதாவது குறை இருந்தால் அல்லவா அவரால் சுட்டிக்காட்ட முடியும்?

இதுவரை கழக அரசு செய்துள்ள பணிகளில் குறை காண்பதற்கு எதுவும் இல்லாததால், இத்தேர்தலுச்குத் துளியும் தொடர்பில்லாததும் பொருந்தக்கூடாததுமான மத்திய அமைச்சரவை மாற்றத்தைப் பற்றிய கற்பனையைக் கூறி, காங்கிரசுக்கு வாக்களிக்கும்படி தென் சென்னை வாக்காளர்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றார்—முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார்!

பக்தவத்சலனார் பேச்சை, தென் சென்னை வாக்காளர்கள் உதறித் தள்ளிவிடுவார்கள் என்பது உறுதி. காரணம், அவர் பேச்சில் பசையுமில்லை—பொருளுமில்லை!

—கா. க.

## உண்மைக்கதை

"ரேஷன் அளவு முறை, என்று எடுக்கப்பட்டதோ அப்போதுதான், 'அதுவரையில் அந்த அளவு முறை இருந்து வந்தது' என்ற உண்மை, இரஷ்ய மக்களுக்குத் தெரிய வந்தது" என்று 'ஸ்பெக்டேட்டர்' என்ற இதழ் எழுதியிருக்கிறது.

★

"அதிபர் ஜான்சனுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தவறிய எகிப்து அதிபர் நாசர், 'கென்னடியைச் சந்திக்கத் தனது பீல்டு மார்ஷல் அமார் என்பவரை அனுப்பினார்' எனப் பேசிச் சிரித்துக்கொள்வது தான், எகிப்து மக்களிடையே மிகப் பெரிய 'ஹாஸ்ய'மாக இருந்து வருகிறது" என 'டைம்ஸ்' இதழின் மத்தியக் கிழக்கு நிருபர் எழுதியுள்ளார்.

# ஜபல்பூரில்...!


## காமராசர் பேசிய 'இங்கிலீஷ்'!



"நேரம் எங்கே இருக்கிறது? அத்தனைபேரும் பேசுவது என்றால் முடியாத காரியம். நீங்கள் எல்லோருமே பேச விரும்புகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்."

—அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் 'விவாதத்தை நீடிக்க வேண்டும்' எனக் கோரியவர்களைப் பார்த்துக் காமராசர் ஆங்கிலத்தில் பேசியதன் மொழி பெயர்ப்பு.

## தேசாய் பேசிய ஆங்கிலம்!



"இந்திதெரியாதவர்களின் நன்மைக்காக இப்போதுநான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். பத்து அம்சத் திட்டங்கள் பற்றித் தலைமை அமைச்சர் இந்தியில் பேசியிருக்கிறார்; அந்த மொழி புரியாதவர்களின் நன்மைக்காக நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்! நான் ஓர் ஆங்கில எதிர்ப்பாளன் அல்ல!"

—அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் பேசியது.

# தி.மு.க. ஆட்சி இருக்கும்வரை இந்தி வராது!

## அமைச்சர் முத்துசாமி விளக்கம்

அண்ணாமலைநகர், அக். 29—

"தமிழ் நாட்டில் இந்தி ஆதிக்கம் ஒருநாளும் வராது. முதலமைச்சர் அண்ணா மற்ற, அமைச்சர்கள், கழகத் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் [illegible]க்கும் வரையில் தமிழ் நாட்டில் இந்தி ஆதிக்கம் வ[illegible]டமாட்டோம்; அப்படி வருமென்றால் கழகத் தலைவர்களின் பிணத்தின்மீதுதான் அது வரும்; அதனால் மாணவர்கள் இந்தி ஆதிக்கம் பற்றி கவலையுற வேண்டியதில்லை; கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டு கவனமாக கல்வி பயிலவேண்டும்"

என்று அமைச்சர் மா. முத்துசாமி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கீழ்திசை மாணவர்கள் 1-வது பிரிவு மாணவர்கள் இல்லத்தின் நுண்கலை கழகத்தை துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

விழாவுக்குத் துணைவேந்தர் பி. சந்திரா ரெட்டி தலைமை வகித்தார்.

மேலும் அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாடு—தமிழ் மொழி—வரலாறு—இலக்கியங்கள் உலக புகழ்பெற்றவை. தமிழ் நாட்டில் எல்லா வளங்களும் செழித்தோங்க நமது முன்னோர்கள்—உழவர்கள்—உழைப்பாளிகள் உயிர் கொடுத்து வளர்த்து வளமடையச் செய்துள்ளனர்.

"நமது தமிழ் மொழி மிக மிகத் தொன்மையானது; ஆனால் தற்கால மாணவர்கள், தமிழ் மொழியின் இலக்கியங்களான திருக்குறள்—பத்துப் பாட்டு முதலியவைகளின் சிறப்புக்களை உணராமல் இருக்கிறார்கள். இதற்கு ஆசிரியர்கள்தான் காரணம்; இனியாவது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தமிழ் இலக்கியப் பற்று ஊட்ட வேண்டு."

பின்னர் நடிகர் ஜெயசங்கர், நுண்கலை பற்றிப் பேசினார்.

## காங்கிரசிலிருந்து 2,000 பேர் வெளியேற்றம்

கருநாடக மாநிலத்திலுள்ள குல்பர்கா மாவட்டத்தில் ஒரு எம்.எல்.சி., ஒரு நகராட்சி மன்றத் தலைவர், 9 நகராட்சி மன்ற உறுப்பினர்கள், பல்வேறு மண்டல காங்கிரசுக் கமிட்டித் தலைவர்கள் உட்பட 2,000 காங்கிரசுக்காரர்கள் தங்கள் கட்சியைவிட்டு வெளியேறிவிட்டனர். அவர்கள், ஏதாவதொரு எதிர்க் கட்சியில் சேர்ந்து விடுவது என்று தீர்மானித்திருக்கிறார்களாம்.

—'டெக்கான் ஹெரால்டு'

# இரண்டும் அங்கேதான்!

"பாங்கிகள், போது இன்சூரன்சுகள் ஆகியவை தேசியமயமாக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றுவது மாபெரும் மோசடியாகும்" என, ஜபல்பூரில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் சில தீவிரவாதிகள் பேசியிருக்கின்றனர்.

★

"தேசியமயமாக்கும் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது, கட்சியின் அழிவுக்கு வழிவகுக்கும்" என, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அதே கூட்டத்தில் காங்கிரசுத் தீவிரவாதிகளை எச்சரித்திருக்கிறார்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

வாக்கைக் கண்டு ஏற்பட்ட அச்சத்தினால் காமராசர் இப்படிக் கூறியுள்ளார் என்று தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது"

என்று பெங்களூரைச் சேர்ந்த எம். எஸ். வேதாந்தம் என்பவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியுள்ளார்.

# கழக செல்வாக்கு கண்டு காமராசரின் பிதற்றல்!

## கருநாடகக் குடிமகனின் நடுநிலை ஆய்வு

"தமிழக அரசின் படி அரிசித் திட்டம் வெற்றிபெறாது என்று காமராசர் கூறியிருக்கிறார்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கையில்— இது மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டு வருகையில், அவர் இந்த மாதிரி கூறியிருப்பது விசித்திரமாக இருக்கிறது!

"இந்தத் திட்டத்தினால் ஏற்படும் பெரிய இழப்பினையும் பொருட்படுத்தாமல், தமிழக அரசு இதனை மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தத் தீர்மானித்திருப்பது, 'இந்த அரசு குறைந்த வருவாய் பெறும் மக்களின் துன்பங்களை நீக்குவதில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது' என்பதைத் தான் காட்டுகிறது!

"வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்

(4-ம் பத்தி பார்க்க)

# நாடாளுமன்றத்தில் கழகத்தின் சாதனை

## இவ்வளவு காலம் காங்கிரசார் சாதித்ததென்ன?

" 'தி.மு.க.-வினர் நாடாளுமன்றத்தில் என்ன செய்தார்கள் ?' என்று கேட்கின்றனர் காங்கிரசுக்காரர்கள் ! 'இந்தியில் மட்டும் பேசலாம்; மற்றவர்கள் தாய்மொழிகளில் பேசக் கூடாது' என்றிருந்த நிலை மாறி—இந்திக்காரர்கள் பிடிவாதம் தளர்ந்து—முதலில் மொழி பெயர்ப்புக் கருவி வைத்த அரசு, பின்னர் தன்னுடைய நிலையில் இறங்கிவந்து—'மற்றவர்களும், தங்கள் தாய்மொழிகளிலும் பேசலாம்' என்று கூறியது !

" காங்கிரசுக்காரர்கள் போன்றுர்களே, இத்தனைக் காலம்—உருவத்திலே பெரியவர்கள் ; அறிவால் பெரியவர்கள் ; பணத்தால் பெயவர்கள் ; பதவியால் பெரியவர்கள் ;—அவர்கள் செய்தார்களா இந்தக் காரியத்தை ? முன்பு சென்றவர்கள் (காங்கிரசார்)—தாங்கள் மட்டும் வாழ்வதற்காகச் சென்றவர்கள் !

" இப்போது சென்றவர்கன் (கழகத்தினர்)—தமிழுக்கு வாழ்வு அளிக்கச் சென்றவர்கள் !

" முன்பு சென்றவர்கள் (காங்கிரசார்) தங்களைக் கவனித்துக் கொண்டார்கள் ! இப்போது சென்றவர்கள்( கழகத்தினர்) நாட்டு மக்களைக் கவனித்து, அவர்களது வாழ்வின் வாட்டத்தைப் போக்கிட முனைகிறுர்கள் !

" 1957-ல் கழகத்தவர் இரண்டுபேரே பாராளுமன்றம் சென்றுர்கள் ; 1962-ல் தோழர் மனோகரன் தலைமையில் எட்டுப் பேர் சென்றுர்கள் , இரண்டு எட்டாக ஆனதும் இந்திக் காரர்களின் பிடி தளர்ந்தது ! இப்போது பாராளுமன்றத்தில், ஐந்தாறு மொழிகளில் உடனுக்குடன் மொழிபெயர்க்க ஏற்பாடு உள்ளது !

" காங்கிரசுக்காரர்கள் இத்தனைக் காலமாகப் போய்க்கொண்டிருந்தார்களே—ஒரு நாள் ஒரு சிறு உரிமைக்குரல் கேட்க முடிந்ததா ? கேட்டோமா ?

" தமிழகத்தின் தேவைகளைக் கேட்டுப் பெற—வாதாடிப் பெறத் தகுதியானவர் மாறன் ; படித்தவர்—இளைஞர்—பொறுப்பான கழகப் பயிற்சி பெற்றவர் ! டில்லியைத் தட்டிக்கேட்க இந்தத் தேர்தலில் தி. மு. கழகத்துக்கு வாக்களியுங்கள் ! கடந்த ஏழு மாதங்களாகத் தமிழக அரசு செய்த சாதனைகளுக்கு உங்களது ஒப்புதலை அளித்திடும் வகையில், உங்களது வாக்குகளை அளித்திடுங்கள் !"

---அறிஞர் அண்ணு

(தியாகராயநகர் கூட்டத்தில்)




# 'சைபர்நெட்டிக்ஸ்'--- ஓர் அறைகூவல்

## 'விசைப் பொத்தான்' நிலைக்கு மனிதன் செல்லக்கூடுமா ?

'கம்ப்யூட்டர்' போன்ற கணக்கிடு இயந்திரங்களின் உள் இயக்கம், கட்டுப்பாடு இவை பற்றிய ஆராய்ச்சியே 'சைபர்நெட்டிக்ஸ்'; குறிப்பாக, தகவல்களை வகை தொகைப்படுத்தி விவரம் அளிப்பதில், மனிதன்' செய்யும் காரியங்களை இந்தப் பொறிகள் செய்கின்றனவாம் !

முற்றிலும் தானியங்கிப் பொறி முறைகளால் நடைபெறும் தொழில்களிவ் பயன்படுத்தப் பெறும் 'சைபர்நெட்டிக்ஸ்' விளைவிக்கும் பலன்கள் ஏராளம்; இதனுல் உற்பத்தித் திறன் ஓங்குகிறது; வளம் பெருகுகிறது; மக்களுக்குக் கிடைக்கும் பணிகளும், ஓய்வு நேரமும் பெருகுகின்றன ; எனவே, தானியங்கிப் பொறிகளால் சில தொழில்களில் தொழிலாளர் வேலை இழக்கக்கூடிய நிலைமை இருந்தாலும்—தனி நபர் ஆர்வம் குன்றக்கூடும் என்றுலும், 'கிடைக்கும் நன்மைகள் அவற்றை விட மிக அதிகம்' என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

வளர்ந்துவரும் ஓர் உலகில், பசி — பிணி — பொருளாதார வளர்ச்சி — மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற பெரிய பிரச்சினைகளை ஒரு முறையாக வெல்வதில் – 'எதெதை முதலில் செய்ய வேண்டும்' என்று தீர்மானிப்பதில், அரசாங்கத்துக்கும் – தொழில் துறை அதிகாரிகளுக்கும் 'சைபர்நெட்டிக்ஸ்' ஒரு வலிமையுள்ள கருவியாக விளங்கும்.

மனிதனை வெறும் 'விசைப் பொத்தான்' நிலைக்குக் கீழிறக்கி விடாமல், அவனுக்கு இயந்திரங்கள் பணி செய்யுமாறு செய்வதே 'சைபர்நெட்டிக்ஸ்' முன்புள்ள அறைகூவலாம்.

# இந்தியா ஒன்றுபட இந்தித் திணிப்பா வழி?

## படையனுப்பச் சொல்லுபவர்கள் ஓர் உண்மை அறியவேண்டும்

### 'மக்களும் அரசும் எதிர்க்கும்போது இந்தியை ஏற்பவர் யார்?'-- அறிஞர் அண்ணு எழுப்பும் வினு

" இந்தியா ஒரே நாடாக ஆக ஒரு பொது மொழி தேவை என்பது, தவருன வாதம்! அடிப்படையான தவற்றை வைத்துக்கொண்டு வாதாடுகிறுர்கள் ! இர்தியாவை ஒரு நாடாக ஆக்கிவிட்டுப் பிறகு ஒரு பொது மொழியைத் தேடுவதுதான் பொருத்தமாகும்.

" இன்றைய நிலையில், இந்தியா ஒரு நாடு அல்ல. இந்தியா முழுவதும் இந்து மதம் இருப்பதால், 'இந்தியா ஒன்று' என்கிறுர்கள் ! ஐரோப்பாவில் பிரான்சு நாட்டிலும், ஜெர்மன் நாட்டிலும் கிருத்துவ மதம்தான் இருக்கிறது என்றுலும், அந்த இரு நாடுகளுக்குமிடையே எல்லைக் கோடுகள் இருக்கின்றன ; அவை ஒன்றுபடாமல், வெவ்வேறு நாடுகளாகத்தான் இருக்கின்றன!

" இந்தியாவில் பலர் பலமுறை முயன்றும், விந்தியம் வரைதான் ஒன்றுபடுத்த முடிந்ததே தவிர, அதைத் தாண்டி தெற்கே உள்ளவர்களை ஒன்றுபடுத்தியதாக நமது வரலாற்றில் ஆதாரம் இல்லை !

" ஒப்புக்கு வேண்டுமானுல், நாம், 'இந்தியா ஒன்றுபட்டு இருந்ததாகக் கூறிக்கொள்ளலாம் ; அது என்றுமே ஒன்றுபட்டு இருந்ததில்லை ; ஆனுல், 'இனியும் ஒன்றுபட்டு இருக்கக்கூடாது' என்று நான் கூறவில்லை !

" நான் இப்படிச் சொல்வதால், எங்கோ இழுத்துச் செல்வதாக எவரும் தவருக எண்ணக் கூடாது ; நான் கூறுவது அப்பழுக்கற்ற ஆதாரம் ஆகும் ; உள்ளத்தில் சிறிதும் வஞ்சகம் இல்லாமல் சொல்கிறேன்—ஒற்றுமை அடைவது எப்படி ?"

என்று அறிஞர் அண்ணு அவர்கள், மாணவர்களின் சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் பேசுகையில் வினு எழுப்பினுர்கள் ; தொடர்ந்து அண்ணு அவர்கள் மொழிப் பிரச்சினை பற்றிப் பேசியதாவது :—

" இந்தியா ஒற்றுமைப்படுவதற்கு முன்பாகவே, இந்தியைத் திணித்து — ஐயத்தை ஏற்படுத்தி—ஒற்றுமையைத் தடுக்கிருர்கள் !

வடக்கே உள்ளவர்கள், தமிழ் நாட்டில் இந்திப் பரீட்சையில் தேறுபவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து — அதன்மூலம் — தமிழ் மக்கள் இந்தியை விரும்புவதாகக் கூறுகிருர்கள்.

ஏற்கனவே ஓரளவு தாங்களாவே விரும்பி இந்தியைப் படித்தவர்கள்கூட இப்போது அதை விட்டுவிட்டார்கள் !

வடநாட்டு இந்தி வெறியர்கள் ஒன்றை உணர வேண்டும்.; 1967 பிப்ரவரி மாதம்வரை தமிழ்நாட்டு மக்கள் மட்டுமே இந்தியை எதிர்த்து வந்தார்கள்; அதற்குப் பிறகு, தமிழ்நாட்டு அரசும் இந்தியை எதிர்த்துவருகிறது ! இதைப் புரிந்து கொள்ளாவிட்டால், எதிர்கால அரசியல் அமளியற்றதாக இருக்க முடியாது !

மாநில மக்களும், அரசும் சேர்ந்து இந்தியை எதிர்க்கும்போது, இந்திப் பிரசார சபா மூலமா இந்தி வளர்ந்துவிடும் ? இது பெரும் வெட்கக்கேடாகும் !

நாட்டு மக்களும் அரசும் இந்தியை எதிர்த்த பிறகும், இந்தி பற்றி விவாதம் எழுப்புகிருர்கள் என்றுல், அதற்குக் துணிச்சலைத் தவிர வேறு என்ன காரணமாக இருக்க முடியும் ?

இராணுவத்தை அனுப்பிப் பார்க்க விரும்பினுல் பார்க்கட்டும் ! சீனுக்காரனையும், பாகிஸ்தான்காரனையும் விரட்ட முடியாத பட்டாளம், ஆயுதமில்லாத மக்களை அழிக்க முடியும் என்று சேத் கோவிந்த தாஸ் கூறுகிருர் ! அப்படி விரும்பினுல் தாராளமாக அனுப்பட்டும் ! ஆனுல் உலகம் காரி உமிழும் !"

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு தமிழக அரசு உத்தரவு

சென்னை, அக். 29—

தேவைக்கும் அதிகமாக உள்ள பணத்தைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் என்னென்ன செய்யலாம் என்பதை விளக்கித் தமிழக அரசு, புதிய உத்தரவு ஒன்றை அனுப்பியிருக்கிறது; அவ்வுத்தரவில கூறப்பட்டிருப்பதாவது :—

"டிராக்டர்களை வாங்கிஊராட்சி ஒன்றியங்கள் அவைகளை உழவர்களுக்கு வாடகைக்கு விடலாம்.

" பயிர்ப் பூச்சி மருந்து தெளிப்பதற்காக, மின்சாரக் கருவிகளை வாங்கலாம்.

" நகரப் பஞ்சாயத்துக்களில் திருமண மண்டபங்களைக் கட்டி பொதுமக்களுக்கு வாடகைக்கு விடலாம்.

" ஆரம்பப் பள்ளிகளில், மதிய உணவுக்காகக் காய்கறித் தோட்டங்கள் அமைக்கலாம்"

# நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

## 1--11--67

### சென்னை 92-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு வடபழனி அம்மன் கோயில் திடலில்; தலைவர் : மன்னர்மணி; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், கே. டி. கே. தங்கமணி, சி. சிட்டிபாபு எம்.பி., கோவை இராமநாதன், சா. கணேசன், எம். குமார், சோ. சி. மூர்த்தி, கா. துரை, செ. கண்ணப்பன், இளங்கீரன்.

### சென்னை 73-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 8 மணிக்கு, சேப்பாக்கம் மசூதி தெருவில்; தலைவர்: இரா. இளவரசு; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் எம்.எல்.சி., சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மா. வெ. மாதவன், அ. வீ. அகிலன்.

### சென்னை 92-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு 'பேசும் படம்' எதிரில்; தலைவர் : ஏ. எஸ். இராமன்; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, மற்றும் பலர். (சதாசிவம்—மோகனா குழுவினர் கலைநிகழ்ச்சி திரு. சா. கணேசன் எம்.சி. தலைமையில் நடைபெறும்.)

### சென்னை 83-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு மாதவபெருமாள் கோயில் தெருவில்; தலைவர்: அ. சி. துளசிங்கம் எம். சி., பேசுவோர் : அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், மா. முத்துசாமி மற்றும் முரசொலி மாறன் எம்.ஏ., கே. இராசாராம் எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., எல். கணேசன் எம்.எல்.ஏ., கே. இராசாமுகமது பி.ஏ.

### சென்னை 76-வது வட்டம்

முஸ்லீம் லீக் சார்பில் இரவு 7-30 மணிக்கு, சூரப்ப முதலி தெருவில்; தலைவர் : ரங்கூன் சுலைமான்; பேசுவோர்: காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் எம்.பி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., எஸ்.எஸ். மாரிசாமி எம்.பி., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., நீலநாராயணன், இராசா முகமது பி.ஏ.

### சென்னை 71-வது வட்டம்

எஸ். எஸ். ஆர். மன்றச் சார்பில் இரவு 8-மணிக்கு லாக் நகர் திடலில்; தலைவர்: எம்.ஈ. மாணிக்கம்; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், என். வி. நடராசன் எம்.எல்.சி., க. இராசாராம் பி. ஏ., எம். பி., நன்னிலம் நடராசன், முரசொலி மாறன் எம்.ஏ., மாணவர் இரசா முகமது, எம். முருகேசன், ஏ. எம். அலி, சி. கிருட்டினன், மாரிமுத்து, கமலம்மாள், டேனியல், மா. மோகன்.

### சென்னை 73-வது வட்டம்

தேர்தல் பிரச்சாரக் கூட்டம்; இரவு 8-மணிக்கு சேப்பாக்கம் மசூதித் தெருவில்; தலைவர்: இரா. இளவரசு; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ஈரோடு சின்னசாமி எம்.எல்.ஏ., க.அறிவழகன் எம்.எல்.சி., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.

### திருத்தங்கல்

கலைவாணர் நினைவு மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு, கே. வி. கே. சாமி திடலில்; தலைவர்: எம். இராசு; பேசுவோர்: கா. காளிமுத்து பி.ஏ., எஸ். பி. மணியம்.

### கள்ளக்குறிச்சி

அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு, வள்ளுவர் திடலில்; தலைவர்: ஏ. இராசு; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம். ஏ., பி. எல்., எம். எல். ஏ., எம். தெய்வீகன் எம்.பி., டி. கேசவலு எம்.எல்.ஏ., எஸ். பி. பச்சையன் எம்.எல்.ஏ.

## 2--11--67

### சென்னை 78-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் இரவு 8 மணிக்கு இராயப்பேட்டை ஐயம்பெருமாள் முதலி தெருவில்; தலைவர்: க. பார்த்தசாரதி எம். சி.; பேசுவோர் ; அமைச்சர் கருணாநிதி, முரசொலி மாறன் எம் ஏ., எஸ். எஸ். தென்னரசு, சி. சிட்டிபாபு எம்.பி., இ. ஆர். நெடுஞ்செழியன், மு. பாண்டியன், டி. இராசா.

### சென்னை 92-வது வட்டம்

முத்தமிழ் மன்றத் துவக்க விழா; இரவு 7—மணிக்கு கோடம்பாக்கம் அண்ணா நகரில்; தலைவர்; காஞ்சி மணிமொழியார்; மன்றத் திறப்பாளர்: அமைச்சர் செ. மாதவன்; பேசுவோர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல். துரைமுருகன் பி.ஏ., நடிகர் என்.எஸ். நாராயணன், இரா. சங்கரலிங்கம், ஜி. தனசேகரன், மு. விசுவநாதன், கே. பி. தூயமணி, பி. ஏ. கணபதி.

### அல்லூர்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர் : பொ. பரமசிவம் ; பேசுவோர் : திருச்சி சௌந்தரராசன், வி. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., வி. எம். கணேசன், புலவர் மு. அருணா, பெ. காத்தான்.

### சென்னை 54-வது வட்டம்

கலைவாணர் மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு சேத்துப்பட்டு வைத்தியநாத முதலி தெரு; தலைவர் : எம். சுந்தரமூர்த்தி; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., பி. சிவசங்கரன் எம்.பி., முரசொலி மாறன் எம்.ஏ., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு, க. மோகனசுந்தரம், கே. எஸ். வான்மதி.

## 3--11--67

### சென்னை 81-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு வன்னிய தேனாம்பேட்டை போயிஸ் சாலையில் ; தலைவர் : சி. முகமது இக்பால் ; பேசுவோர் : அமைச்சர் மா. முத்துச்சாமி, சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ப. உ. சண்முகம், புலவர் அறிவுடைநம்பி, முரசொலி மாறன் எம்.ஏ., கோவை இராமநாதன், வீரஜின்னு, சி. வி. ஆடலழகன், கவிஞர் வாலி, வெ. கண்ணன், வை. பாலசுந்தரம், ஏ. லோகநாதன், பு. இலக்குவன், அ. டேனியல், தருமபுரி பெரும்பாக்கன், பார்த்தசாரதி, தெ. வெங்கடேசன்.

---

உணவு அமைச்சர்

## கே.ஏ. மதியழகன்

### வெளிநாட்டுப் பயணம்

அக். 2: காலை 9-25 மணி: சென்னையிலிருந்து புறப்பாடு; பகல் 12-05 மணி : டெல்லி.

அக. 3 : மாலை 6 மணி : டெல்லியிலிருந்து புறப்பாடு; இரவு 9-15 மணி : பம்பாய்.

அக். 4 : நள்ளிரவு 1 மணி : பம்பாயிலிருந்து புறப்பாடு; காலை 3-15 மணி : தெஹ்ரான் ; 4-15 மணி : தெஹ்ரானிலிருந்து புறப்பாடு ; 6-40 மணி : ரோம்.

(அக். 4 முதல் 23-வரையில் ரோம் நகரில் நடைபெறும் 14-வது உணவு—விவசாய மாநாட்டில் கலந்துகொள்வார்.)




---

மாண்புமிகு அமைச்சர்

## மு. கருணாநிதி

அவர்கட்கு

### வாழ்த்து -- வரவேற்பு--பாராட்டு பன்மொழி கவி அரங்கம்

1—11—67 காலை 8-30 மணிக்கு தியாகராய நகர் வாணிமகாலில்

தலைவர் : பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரையார்

பங்குபெறும் புலவர்கள் :

தமிழில் :
கா. வேழவேந்தன், குடியரசு, ஆலங்குடி சோமு, என். எஸ். சிதம்பரம், கு. மா. பாலசுப்பிரமணியம், சுப்பு ஆறுமுகம், ஈரோடு ஆற்றலரசு ;

கன்னடத்தில் :
கே. ஆர். கணேஷ் ராவ் ;

தெலுங்கில் : ஆருத்ரா ;
மலையாளத்தில் : ஸ்ரீகுமாரன் தம்பி ;
ஆங்கிலத்தில் :
கிருஷ்ண ஸ்ரீனிவாஸ் !

மேயர் இரா. சம்பந்தம்
தலைமையில்

அரசியல் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் சார்பில் அமைச்சர் மு. கருணாநிதிக்கு மலர் மாலைகள், மற்றும் மரியாதைகள் வழங்கல்.

வாழ்த்துரை :
காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி., ம. பொ சிவஞானம் எம்.எல்.ஏ., கி. ஆ. பெ. விசுவநாதம், சுந்தர்லால் நஹாதா, டி. வி. நாராயணசாமி, எஸ், எஸ். மாரிசாமி எம்.பி., அபதுல்சமது எம்.பி., கே.டி.கே. தங்கமணி.

---

### பேச்சாளர் முகவரி :

தர்மபுரி நகர தி.மு.க. அவைத் தலைவரும் சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவருமான தோழர் பெரும்பாக்கன், தென் சென்னை தேர்தல் பிரசாரத்தை முன்னிட்டு, 'அன்பக'த்தில் தங்கியுள்ளார் ; கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் 'அன்பக'த்தில் தொடர்புகொள்ளவும்.

---

## குழுக் கூட்டம்

"திருத்துறைப்பூண்டி வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம், 3—11—67 காலை 10 மணிக்கு திருத்துறைப்பூண்டி இரயிலடித் தெரு பிரதர் மாடியில் நடைபெறும்" என்று, ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

---

## பஸ் ஓடும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்

### மாநில அரசு ஏற்கும்

திருச்சி, அக். 28—

தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 250 மைல் பஸ் ஓடும் சாலைகளை இவ்வாண்டு அரசு ஏற்கும்.

நடப்பு திட்டக் காலத்துக்குள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள எல்லா பஸ் ஓடும் சாலைகளையும் ஏற்பது அரசின் குறிக்கோளாகும்.

---

## உயர்நிலைப் பள்ளி அடிக்கல்நாட்டு விழா

### அமைச்சர் நெடுஞ்செழியன் பங்கேற்பு

சென்னை 22-வது வட்டம் குமாரசாமி நகர் புட்டா செட்டி தெருவிலுள்ள மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான துணைக் கட்டிடத்திற்கு 2—11—67 மாலை 5-30 மணிக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையில்—கே. மாணிக்கம் முன்னிலையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டுவார்.

---

## கலை நிகழ்ச்சி

சென்னை 73-வது வட்ட தி.மு.க. சார்பில் சேப்பாக்கம் வெங்கடேச நாயக்கன் தெருவில் ; 3—11—67 இரவு 7 மணிக்கு சோ. தாமோதரன் தலைமையில் சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

---

ரோஜா பாக்கு & புகையிலை

ROJA REGD. NO. 116331

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

---

## காதால் கேட்டது!

காங்கிரசுக்காரர் :—

"என்னண்ணே ! புறப்படலாமா கூட்டத்துக்கு ? நேரமாவுதே ?

காங்கிரசுப் பேச்சாளர் :—

"எங்கப்பா புறப்படறது ? என்னய்யா பண்ணச் சொல்றீக ? இந்தப் போலீசுக் கமிஷனர் கடைசியில் இப்படிப் பண்ணிட்டாரே ! 'உண்மையாலுமே கூட்டங்களுக்குத் தடை போட்டிருப்பார் ; போவலாம்—சொந்த வேலையைப் பார்த்து' என்று நினைச்சேன் ; கடைசியிலே, 'கூட்டங்களுக்குத் தடையில்லை; உத்தரவு, ஒழுங்குபடுத்தும் ஒரு நடவடிக்கைதான்'னு சொல்லிவிட்டாரே ! இன்னும் ஏழாம் தேதிவரை எதைச் சொல்லி கூட்டத்துலே அழறதோ தெரியலே ! நல்ல சோதனையப்பா !"

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, ... செங்குத் தெரு, சென்னை-... )